**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.414** **நாள்:22.08.2026**

**பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுமக்களிடையே கழிவுகளை தரம் பிரித்து வழங்கும் பழக்கத்தை உருவாக்கும் நோக்கில் "குப்பையைப் பிரிப்போம் – நாளையை காப்போம்" என்ற 40 நாள் வீடுகளுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி தெற்கு வட்டாரத்தில் இன்று தொடங்கப்பட்டது.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டில் திடக்கழிவுகளை மேலாண்மை பணிகளை சிறப்பாக மேற்கொள்வதற்கு ஏதுவாக, திடக்கழிவுகள் உருவாகும் இடத்திலேயே முறையாக மக்கும் குப்பை, மக்காத குப்பை, சுகாதாரக் கழிவுகள் மற்றும் அபாயகரமான கழிவுகள் என தரம் பிரித்து பெற்று அகற்றிட நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தியுள்ளார்கள்.

அதனடிப்படையில், பெருநகர சென்னை மாநகராட்சி முழுவதும் அறிவியல் முறையிலான திடக்கழிவு மேலாண்மையை வலுப்படுத்தும் நோக்கில், தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டும், மக்களிடையே விழிப்புணர்வும் ஏற்படுத்தப்பட்டும் வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, பெருநகர சென்னை மாநகராட்சியில் பொதுமக்களிடையே குப்பைகளைத் தரம் பிரித்து வழங்கும் பழக்கத்தை உருவாக்கும் நோக்கில் "குப்பையைப் பிரிப்போம் - நாளையை காப்போம்" என்ற 40 நாள் வீடுகளுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி தெற்கு வட்டாரத்தில் இன்று (22.08.2026) தொடங்கப்பட்டது.

இதன் ஒரு பகுதியாக, வளசரவாக்கம் மண்டலத்தில் கிருஷ்ணமாச்சாரி நகர், 4வது தெரு மற்றும் அஷ்டலட்சுமி நகர் 5வது தெரு, ஆலந்தூர் மண்டலத்தில் இமாச்சல் நகர் இணைப்புப் பகுதி, அடையாறு மண்டலத்தில், திருவான்மியூர், முத்துலட்சுமி சாலை, பெருங்குடி மண்டல அலுவலகப் பகுதி, சோழிங்கநல்லூர் மண்டலத்தில் தொழிலாளர் குடியிருப்புப் பூங்காப் பகுதி ஆகிய இடங்களில் உள்ள பொதுமக்களுக்கு வீடுவீடாகச் சென்று மக்காத குப்பைகளை தனியாக சேகரித்து வழங்குவதற்கான பிரத்யேகப் பை மற்றும் விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்கள் வழங்கியும் வீடுகளின் சுவற்றில் ஒட்டியும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இத்திட்டத்தின் மூலம் முதற்கட்டமாக தென் சென்னை மண்டலங்களான வளசரவாக்கம், ஆலந்தூர், அடையாறு, பெருங்குடி மற்றும் சோழிங்கநல்லூர் ஆகிய பகுதிகளில் மொத்தம் 50,000 வீடுகளைச் சென்றடையும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மண்டலத்திலும் 10,000 வீடுகள் தேர்வு செய்யப்பட்டு, கட்டம் கட்டமாக திட்டம் செயல்படுத்தப்படும்.

திட்டத்தின் தொடக்க நாளான ஆகஸ்ட் 22, 2026 அன்று தெற்கு வட்டாரத்தில் உள்ள அனைத்து மண்டலங்களிலும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் தொடங்கப்பட்டன. தொடக்க கட்டமாக ஒவ்வொரு மண்டலத்திலும் 1,000 வீடுகள் வீதம் மொத்தம் 5,000 வீடுகளுக்கு கழிவு

தரம் பிரித்தலுக்கான சிறப்பு பைகள் மற்றும் விழிப்புணர்வு தகவல் தொகுப்புகள் வழங்கும் பணி மேற்கொள்ளப்பட்டன.

முதற்கட்ட நடவடிக்கையைத் தொடர்ந்து, மீதமுள்ள 45,000 வீடுகளுக்கும் திட்டம் படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டு செயல்படுத்தப்படும்.

தேர்வு செய்யப்பட்ட ஒவ்வொரு வீட்டிற்கும் மக்காத குப்பைகளை தனியாக சேகரித்து வழங்குவதற்கான பிரத்யேக பை வழங்கும் பணி மேற்கொள்ளப்படுகிறது. மேலும், வீடு வீடாக நடைபெறும் நேரடி விழிப்புணர்வு நடவடிக்கைகளின் மூலம் மக்காத குப்பைகளை தனியாக பிரித்து, நிர்ணயிக்கப்பட்ட சேகரிப்பு முறையில் வழங்குவது குறித்து பொதுமக்களுக்கு விளக்கப்படுகிறது.

இந்த பை, கழிவுகளை தரம் பிரிப்பதை எளிதாகவும் தொடர்ந்து கடைப்பிடிக்கக்கூடியதாகவும் மாற்றும் ஒரு கண்கூடான நினைவூட்டலாக செயல்படும். 40 நாட்கள் நடைபெறும் இத்திட்டத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் உர்பேசர் சுமீத் குழுக்கள் இணைந்து தொடர்ந்து வீடுகளுக்குச் சென்று பின்தொடர்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு, கழிவு தரம் பிரித்தலை வலுப்படுத்தி, பொதுமக்களின் பங்கேற்பை கண்காணிப்பார்கள்.

இத்திட்டம் பொதுமக்களை "விழிப்புணர்வு → செயல்பாடு → பழக்கம் → தொடர்ந்து கடைப்பிடித்தல்" என்ற நான்கு நிலைகளின் வழியாக கொண்டு சென்று, திடக்கழிவு மேலாண்மையில் நிலையான மாற்றத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

"குப்பையைப் பிரிப்போம் – நாளையை காப்போம்!" என்ற முக்கிய செய்தியுடன் செயல்படுத்தப்படும் இத்திட்டம், தூய்மையான மற்றும் நிலையான சென்னை நகரை உருவாக்குவதற்கான ஒரு முக்கிய முயற்சியாக அமையும்.

இந்நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.ரேவந்த் சரண் (மதுரவாயல்), திரு.எம்.ஹரிஷ் (ஆலந்தூர்), திரு.ஈ.சி.ஆர்.பி.சரவணன் (சோழிங்கநல்லூர்), மண்டலக்குழுத் தலைவர்கள் திரு.நொளம்பூர் வே.ராஜன் (வளசரவாக்கம்), திரு.என். சந்திரன் (ஆலந்தூர்), மாமன்ற உறுப்பினர்கள் திருமதி மா.ரமணி மாதவன், திரு.ஜெ.எஸ்.செல்வேந்திரன், திரு.ஜெ.மணிகண்டன், மண்டல அலுவலர்கள், மாநகராட்சி மற்றும் உர்பேசர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**

**Greater Chennai Corporation**

**Press Release**

**PR.No.414** **Dated: 22.08.2026**

**With the aim of encouraging the practice of segregating waste among the public, the Greater Chennai Corporation launched a 40-day household awareness drive titled "Segregate Waste – Save Tomorrow" in the South Region today.**

The Honorable Chief Minister of Tamil Nadu has instructed that, in order to facilitate efficient solid waste management in Tamil Nadu, steps must be taken to collect and dispose of waste by properly segregating it right at the source into biodegradable waste, non-biodegradable waste, sanitary waste, and hazardous waste.

Accordingly, with the goal of strengthening scientific solid waste management across the Greater Chennai Corporation, cleanliness drives and public awareness campaigns are actively being carried out.

As a continuation of these efforts, with the objective of instilling the habit of waste segregation among the public, a 40-day door-to-door awareness program titled **"Segregate Waste – Save Tomorrow"** was launched today (22.08.2026) in the South Region of the Greater Chennai Corporation.

As part of this initiative, awareness was created by going door-to-door and distributing exclusive bags for collecting non-biodegradable waste separately, handing out informational flyers, and putting up awareness posters on house walls in the following areas:

- **Valasaravakkam Zone**: Krishnamachari Nagar 4th Street and Ashtalakshmi Nagar 5th Street
- **Alandur Zone**: Himachal Nagar Link Area
- **Adyar Zone**: Integrated Child Care Centre on Muthulakshmi Salai, Thiruvanmiyur
- **Perungudi Zone**: Zone Office area
- **Sholinganallur Zone**: Labour Housing Park

Under the first phase of this scheme, a target has been set to reach a total of **50,000 households** across the South Chennai zones: Zone 11 (Valasaravakkam), Zone 12 (Alandur), Zone 13 (Adyar), Zone 14 (Perungudi), and Zone 15 (Sholinganallur). 10,000 households will be selected in each zone, and the scheme will be implemented in phases.

On the launch day (August 22, 2026), awareness activities commenced in all zones across the South Region. In the initial phase, special bags for waste segregation along with awareness information kits were distributed to 1,000 households per zone, covering a total of 5,000 households.

Following this initial phase, the scheme will be gradually expanded to cover the remaining 45,000 households.

Each selected household is provided with a dedicated bag for collecting non-biodegradable waste separately. Furthermore, through direct door-to-door awareness drives, the process of segregating non-biodegradable waste and handing it over through the designated collection system is explained to the public.

This bag acts as a tangible visual reminder to make waste segregation simple and sustainable. During this 40-day campaign, teams from the Greater Chennai Corporation and Urbaser Sumeet will jointly carry out regular door-to-door follow-ups to reinforce waste segregation and monitor public participation.

The scheme aims to create a sustainable change in solid waste management by guiding the public through four stages: **Awareness → Action → Habit → Sustained Practice**.

After the completion of 40 days, household participation, waste collection efficiency, and improvements in segregation will be evaluated. Based on the learnings and operational results from the initial phase, the program will be scaled up gradually from 5,000 households to 50,000 households.

Implemented with the core message **"Segregate Waste – Save Tomorrow!"**, this program will serve as a crucial initiative toward building a cleaner and more sustainable Chennai.

The event was attended by Members of the Legislative Assembly (MLAs) Mr. Revanth Charan (Maduravoyal), Mr. M. Harish (Alandur), and Mr. E.C.R.P. Saravanan (Sholinganallur); Zonal Committee Chairpersons Mr. Nolambur V. Rajan (Valasaravakkam) and Mr. N. Chandran (Alandur); Councilors Mrs. M. Ramani Madhavan, Mr. J.S. Selvendran, and Mr. J. Manikandan; along with Zonal Officers and officials from the Corporation and Urbaser.

**Issued By: Joint Director/Public Relations Officer,**
**Greater Chennai Corporation**